**<u>DEPOSITION OF WITNESS</u>**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 141/2019**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW4
Defendant :
Court :

Name : இதயதுல்லா
Father's/
Husband Name : ஜஹாங்கீர்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

09.03.2026. **CC.No.141/2019** அ.சா.4 இதயதுல்லா

( எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**<u>முதல் விசாரணை</u>:**

நான் லாடனேந்தலில் குடியிருந்து செங்கல் சூளை வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்துபோன ராமன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் ஓட்டுநர் ஆவார். கடந்த 2008 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை. நானும், சுப்பையாவும், நேரு ஆகியோர்களும் லாடனேந்தல் பேருந்து நிறுத்தம் அருகே மதியம் சுமார் 01.00 மணியளவில் பேசிக்கொண்டிருந்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த ராமன் என்பவர் சைக்கிளிலில் லாடனேந்தல் பேருந்து நிறுத்ததிலிருந்து மானாமதுரை – மதுரை செல்லும் ரோட்டின் இடது புறமாக மேற்கு நோக்கி ராமன் சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த 407 வேன் சம்பவம் நடந்து நிறைய வருடங்கள் ஆனதால் எனக்கு வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை. மேற்படி வேன் ராமன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தபோக்கு இருந்தது. நாங்கள் ஆம்புலன்ஸ் மூலமாக மதுரை

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.03.09 17:22:30 +0530

அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மேற்படி 407 வேனை ஓட்டிவந்தவர் குறித்து தற்போது எனக்கு ஞாபகமில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 02.05.2008 ம் தேதியன்று பகல் 13.00 மணியளவில் லாடனேந்தலில் மதுரை – ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் ராமர் என்பவர் சைக்கிளிலில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார் என்றும் அதே திசையில் TN 57 B 4786 என்ற பதிவெண் கொண்ட 407 வேனை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி ராமர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி ராமரின் இறப்பிற்கு காரணமானார் என எனது போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றும், எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.09 17:22:37 +0530